நிறைவேற்றுகிறபோது நம்மிடத்தில் இருக்கிற நிலங்களைக் கொடுத்தால் அதற்கு அரசு நிர்ணயிக்கிற விலையை நாம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு கொடுக்கிறோம். அல்லது நிலங்களை லீசுக்கு கொடுக்கிறோம். அதுபோன்ற நிலையை தான் நாம் வைத்திருக்கிறோம். சில இடங்களில் தனியார்களே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அவர்கள் வாங்குகிறபோது அவர்களே அங்கேயிருக்கிற விவசாயிகள், நிலச்சுவான்தார்கள் அல்லது நில உரிமையாளர்களிடத்தில் நிலங்களை தாங்களே விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கிற நிலங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் மனமுவந்து அந்தப் பகுதியில் திட்டம் வர வேண்டும் என்பதற்காக அந்தப் பகுதி மக்கள் ஒத்துழைப்பு கொடுத்து அந்தத் தனியார்களை உற்சாகப்படுத்துவதாக கூட சொன்னார்கள். அவர்களுக்கு தேவையான நிலங்களைத் தான் அவர்கள் வாங்க முடியும். 800 ஏக்கர் வாங்குகிறார்கள் என்றால், தேவையிருந்தால் தான் அதற்கு மேல் 400 அல்லது 500 ஏக்கர் வாங்குவார்கள். திட்டத்திற்கு எவ்வளவு தேவையோ அதைத்தான் அவர்கள் வாங்க முடியும். வேறு அடிஷனல் ஸ்கீம்ஸ் அவர்கள் வைத்திருப்பார்களானால் பக்கத்திலே இருக்கிற நிலங்களையும் அவர்கள் வாங்குவதற்கு சொல்லலாம். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை மனதில் கொண்டு, அந்தப் பகுதி மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த அரசு அந்த தனியார் துறையைச் சார்ந்தவர்களிடத்தில் பேசி, அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவ முடியுமோ, எந்த அளவுக்கு அவர்களுக்கு சாதகமாக செய்ய முடியுமோ அந்த நிலையை மேற்கொள்ள வழி முறைகளை இந்த அரசு ஆராயும், நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 169, திரு. சு. அர்ச்சுனன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

169—

காந்தள் மலர் விவசாயம்

**82440—திரு. க. அர்ச்சுனன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காந்தள் மலர்க் கொடியின் கிழங்குகளில் செய்யப்படும் மருந்து வகைகள் மூலம் அந்நியச் செலாவணி கிடைப்பதுடன் விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைப்பதால் காந்தள் மலர் விவசாயத்தை அரசு ஊக்குவிக்குமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காந்தள் மலர்க்கொடியின் கிழங்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எதற்காக வெளிநாட்டினர் இந்தக் கிழங்கை வாங்குகிறார்கள். இதனுடைய மருத்துவ மகிமை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? மேலும் இந்த காந்தள் மலரை இலக்கியத்தில், பெண்களுடைய விரல்களுக்கு இணையாக கவிஞர்கள் ஒப்பிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவிஞராக இருக்கின்ற காரணத்தால், எதற்காக இப்படி ஒப்பிட்டார்கள் என்பதை விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவகாரமான வேலைகளுக்கு எல்லாம் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை இழுப்பதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கலப்பைக் கிழங்கு என்று சொல்லக்கூடிய காந்தள் மலரினுடைய விதைகள், பழத்தோல்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. என்ன காரணத்தினால், ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை இன்றும் அறிய முடியவில்லை. ஆனால், இதனுடைய தேவை தமிழகத்தில் இல்லை. வெளிநாடுகளில் கூட இரண்டு நாடுகளில் மட்டும்தான் இதைக் கொள்முதல் செய்தார்கள். பிறகு, இவைகளுக்கு நல்ல விலை இல்லை. ஆனால், இந்தப் பூக்களைப் பார்க்கின்றபோது, ஐந்து விரல்களைக் கொண்டதாக இந்தப் பூ அமைந்திருக்கும். உள்ளங்கை போல சற்று மஞ்சள் நிறமாகவும், விரல்கள் முழுக்க சிவப்பாகவும் இருக்கிற காரணத்தாலே, இலக்கியத்திலே இந்தக் காந்தள் மலரை காந்தள் விரல் என்று வர்ணிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்டதே வேறு.

1996 மார்ச் 1]

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காந்தள் மலர் கிழங்கு பயிர் செய்கின்றபோது மற்ற எல்லா விவசாயத்தையும் விட அதிகமான லாபம் கிடைப்பதால் விவசாயிகள் சொல்கிறார்கள். இதை ஏற்றுமதி செய்யக்கூடியவர்கள் ஒருசிலர் மட்டும்தான் இதனுடைய உற்பத்தியைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எந்த நாட்டிற்கு இது ஏற்றுமதி செய்யப்படுகிறது ? எந்த நிறுவனத்தின் மூலம் ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது ? இந்தக் கிழங்கை பயிரிடக்கூடிய முறை போன்றவற்றை எல்லாம் விவசாயத் துறையின் மூலமாக சொல்லிக் கொடுத்து, ஊக்குவித்தால், மற்ற விவசாயத்தைவிட இதை அதிகமாக உற்பத்தி செய்வார்கள். மேலும், இந்தக் கிழங்கை ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் - அதிகப்படியான லாபம் கிடைக்கிற காரணத்தால். - மற்ற விவசாயத்துறைப் பயிர்களுக்கு ஊக்கம் அளிப்பதைப் போல, இதற்கும் ஊக்கம் அளித்து, விவசாயிகள் அதிக பயனைப் பெறக்கூடிய வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெர்மன், ஹாலந்து ஆகிய இரண்டு வெளிநாடுகளுக்கு மட்டுமே, இது ஏற்றுமதி செய்யப்பட்டது. 1989-ஆம் ஆண்டு முதல், 1991 ஆம் ஆண்டு வரை ஒரு கிலோ விதைக்கு ஏறத்தாழ 500 ரூபாய் முதல், 600 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதற்குப் பிறகு, நல்ல வருவாய் கிடைக்கின்ற காரணத்தால், நிறைய விவசாயிகள் இதைப் பயிரிடுவதற்கு முன்வந்தார்கள். ஆனால் கொள்முதல் செய்யக்கூடிய நிறுவனங்கள் இதிலே ஆர்வம் காட்டாத காரணத்தாலும், மேலைநாடுகளில் தேவை குறைவாக இருக்கின்ற காரணத்தாலும், தற்போது ஒரு கிலோ விதை 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய்க்கு குறைந்திருக்கிறது. எனவே, நல்ல விலை விவசாயிகளுக்குக் கிடைக்காத நேரத்திலே, விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கு அரசு இந்தத் தொழில் நுட்பத்தை அறிந்து அவர்களுக்கு தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் இப்போது இல்லாத நிலை இருக்கிற காரணத்தாலே, இதை அரசு பரிசீலிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி .

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காந்தள் மலர் என்பது கிராமப்பகுதிகளின், கண்வலிப்பூ என்று அழைக்கப்படுகிறது. கிராமங்களில், அந்த காலங்களில், கண்வலி வருகின்றபோது, இன்று போல், 'ஐ டிராப்ஸ்' விடுவதற்குப் பதிலாக அந்த

மலரினுடைய சாறுகளையும், அந்த இலைகளினுடைய சாறுகளையும், பயன்படுத்தி, அந்த நோயை குணப்படுத்தி வந்தார்கள். எனவே, இந்த காந்தள் மலரைப் பயிர் செய்கின்ற தன்மையையும், அதனுடைய சிறப்புத் தன்மையையும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துகின்ற வகையில், இதைச் செயல்முறைப்படுத்துவதற்கு ஏதாவது சிறப்புக் கவனம் செலுத்தி, நடைமுறைப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? மேலும், இந்த காந்தள் மலரை விவசாயத்திலே பயன்படுத்தி, அதனுடைய கிழங்கை ஏற்றுமதி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கு.ப.கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கண்வலிப்பூ அல்ல. கண்கவர் பூ, கார்த்திகை பூ, என்று சொல்வார்கள். ஏன் என்று சொன்னால், இந்த மலரைப் பார்க்கின்றபோது, கவர்ச்சி ஏற்படும். அந்த மலரினுடைய அழகு பார்க்கின்றவர்களை கவர்ந்து இழுக்கும். மேலும், *1992-93* ஆம் ஆண்டு, தமிழ்நாடு மருத்துவப் பண்ணைக் கழகத்தால், இது ஆராயப்பட்டது. இதனுடைய தேவை வெளிநாடுகளில் குறைவாக இருக்கின்ற காரணத்தால், இதை அரசு பரிசீலனை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள், சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டும்.

முற்பகல் 10-55

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காந்தள் மலர்க் கிழங்குகளுக்கு நல்ல விலை இருக்கிறது என்று விவசாயிகள் கருதுகிறார்கள். மேலும் இதைப் பயிரிடுவதற்கு தண்ணீர் தேவை அதிகம் இல்லாததால் கிராமப்புறங்களில் தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் இதைப் பயிரிடுவதற்கு ஏதுவாக அமையும் என்ற முறையிலே அரசு ஊக்கம் கொடுத்து மற்றவைகளுக்கு மானியம் கொடுப்பது போல இதற்கு மானியம் கொடுத்து தரிசு நிலங்களை மேம்படுத்துகின்ற திட்டத்தின் மூலமாக இதைப் பயிர் செய்வதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கு.ப.கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவை அதிகம் இல்லாத காரணத்தினாலே உழவர்களுக்கு பயிற்சி தருவதும், மானியம் தருவதும் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

1996 மார்ச் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *170,* திரு. ஏ.கே.சி.சுந்தரவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

170—

கண்காணிப்புக் குழு அமைத்தல்

**107992—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு அளிக்கும் மானியங்கள் விவசாயிகளுக்கு வினியோகிக்கப் படுவதைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது; கொடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டில் அரசு அளிக்கும் மானியங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுவதைக் கண்காணிக்க மாவட்ட அளவில் அந்தந்த வேளாண்மை இணை இயக்குநர்களும், மாநில அளவில் கூடுதல் வேளாண்மை இயக்குநர்களும் கண்காணித்து வருவது மட்டுமின்றி திட்ட ஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாளில் இது குறித்து ஆய்வு செய்கிறார். தவறுகள் ஏதாகிலும் நேரிடும் பட்சத்தில் வேளாண்மைத் துறையினால் நியமிக்கப்பட்டுள்ள நடமாடும் குழுவினை அனுப்பி விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் உரச்சட்டம் (1985ம் ஆண்டு) மூலம் விநியோகிக்கும் உரங்களின் தரத்தையும் வேளாண்மைத் துறை கண்காணித்து வருகிறது.

6-5-1995 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அளிக்கப்பட்ட *1994-95*-ம் ஆண்டு மதிப்பீட்டுக் குழுவின் வேளாண்மைத்துறையின் மீதான அறிக்கையில் உள்ள பரிந்துரையில் பெருமழை வெள்ளம் மற்றும்